NELIKOLU CHARITABLE TRUST
Kekkatty, Ellanhalli, Post, The Nilgiris- 643243.
305, Linghi Chetty St., 3rd Floor, Chennai-600001.
நங்0கவ நங்0க அறிவோ
*Let's know ourselves*

---

## நெலிகோலு அறக்கட்டளையின் சமூகப் பணிகள்

நீலகிரி சிறு விவசாயிகள் நலனில் **நெலிகோலு அறக்கட்டளையின்** பங்கு:
**பாகம் - 2**

மேலும் தேயிலைச் சட்டம் 1953-ன் பிரிவுகளின்படி சிறுதேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு உண்மையான விலையைப் பெற்றுத் தரவேண்டியது நடுவண் அரசின் பொறுப்பு என்றும் அந்த உத்திரவு குறிப்பிடுகிறது.

உண்மை விலை என்பது சிறு விவசாயிகளின் பசுந்தேயிலையின் உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என்றும் அந்தச் செலவை அறுதியிடுவதில் நடுவண் அரசு அறிவியல் அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அந்த உத்திரவு குறிப்பிடுகிறது.

இந்தத் தீர்ப்பினைத் தொடர்ந்து நடுவண் அரசு IIPM (Bangalure) என்ற நிறுவனத்தைப் பணியமர்த்திப் பசுந்தேயிலைக்கான சாகுபடிச் செலவைக் கணக்கிட வேண்டும் எனக்கேட்டுக் கொண்டது. இந்தக் குழு கள ஆய்வு மேற்கொண்ட பின் தனது அறிக்கையில் 2003 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்கு ஒரு கிலோ பசுந்தேயிலைக்கான சாகுபடிச் செலவு ரூ. 14/- என்று அறிவித்தது.

மேலும் நீலகிரி பசுந்தேயிலையின் தரம் சரியாக இல்லை என்னும் கூற்றைப் பொய்யாக்கித் தேயிலைத் தூளின் தரத்திற்குத் தேயிலைத் தொழிற்சாலைகளே முதன்மையான காரணம் என்பதைக் காட்டியது. இந்தக் குழு அறுதியிட்ட அந்தச் செலவைக் கருத்தில் கொண்டு கணக்கிட்டால் இன்றைக்கு (மே 2017) நம் பசுந்தேயிலையின் சாகுபடிச் செலவு ஒரு கிலோவிற்கு ரூ.19/- என வரும்.

இந்த உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு, சாகுபடி செலவைக் கணக்கிட அமர்த்திய குழுவின் அறிக்கை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு இப்பொருள் பற்றி தொடர்ந்து செயல்படவேண்டிய தேவையையும் திறம்பட செயலாற்ற வேண்டிய கட்டாயத்தையும் உணர்ந்து நெலிகோலு அறக்கட்டளை தன் வழி காட்டுதலில் "நீலகிரி நெலிகோலு சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகள் மற்றும் சாகுபடியாளர்கள் சங்கம்" என்னும் அமைப்பு ஒன்றினை உருவாக்கியது. இச்சங்கம்

---

தேயிலை விவசாயிகளுக்காகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. நாம் மேற்கொண்ட தொடர் முயற்சியின் பயனாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாதந்தோறும் கூடிப் பசுந்தேயிலை விலையை அறுதியிட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் நம் சங்கத்தின் சார்பாக முன்னாள் தலைமையாசிரியர் அண்ணிக்கொரை திரு. எம். ஜோகி கவுடர் அவர்கள் ஓர் உறுப்பினராக இடம்பெற்றுள்ளார் என்பது நமக்குப் பெரும் வலுவாக உள்ளது. இதனை நம் சங்கத்தின் அருஞ் சாதனை என்றுதான் கொள்ள வேண்டும்.

இதைத் தொடர்ந்து தேயிலைத் தொழிற்சாலைகளின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் சிறு, குறு தேயிலைச் சாகுபடியாளர்களே குழுக்களாகச் சேர்ந்து சிறிய அளவிலும் தேயிலைத் தொழிற்சாலைகள் உருவாக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வகைத் தொழிற்சாலை உருவாக்குவோர்க்கு அரசு மானியங்களையும் அறிவித்துள்ளது.

பசுந்தேயிலைக்குரிய காப்பீட்டுத் திட்டம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள வந்திருந்த பாராளுமன்ற அலுவல்குழுவினை நம் சங்கத்தினர் சந்தித்து நமக்குச் செய்ய வேண்டியன தொடர்பாக ஆலோசனை வழங்கியுள்ளனர். பசுந்தேயிலைக்குரிய விலைக்காக நெலிகோலு அறக்கட்டளையின் சார்பில் பல கூட்டங்கள் நடந்தன. துண்டறிக்கைகள் வெளியிடப்பட்டன. மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த நெலிகோலு அறக்கட்டளையின் சார்பில் நீலகிரியின் பல பகுதிகளில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சங்கத்தினர் இது தொடர்பான அமைச்சர்களையும் அதிகாரிகளையும், நேரில் சந்தித்து நம் கோரிக்கைகளை எடுத்துக் கூறி வருகின்றனர். இதற்காகச் சங்கத்தினர் டில்லிக்கும் சென்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*............ தொடரும்*